"இவருக்கு 'கவீச்வரன்' என்ற விருதை அளிக்கிறேன் இன்று முதல் இவரை கவீச்வரன் என்று அழைக்க வேண்டும்" என்று கூறினார். அந்தப் பரவசத்திலிருந்து மீண்டு நந்தி தன் உடலில் இருந்த கொஞ்சம் வெண்குஷ்டம் போனதைக் கண்டு சந்தோஷமடைந்து சுவாமியை வணங்கினார். அன்று முதல் அங்கேயே இருந்து ஸ்ரீகுருவிற்குச் சேவை செய்து கொண்டிருந்தான். இதேபோல் வேறொரு கவியும் குருவின் கிருபையை பெற்றான்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*





*திகம்பரா திகம்பரா ஸ்ரீபாதவல்லப திகம்பரா!*

## அத்தியாயம் 46

நாமதாரகன் சித்த முனியிடம் "முனீந்தரா சுவாமியிடம் வேறொரு புலவர் இருந்தார் என்றீரே, அவரைப் பற்றித் தெரிவியுங்கள்" என்று வேண்டினான்.

கானகாபுரத்தில் நந்தி எழுதிய ஸ்தோத்திரங்கள் சுற்றி இருக்கும் ஊர்களில் புகழடைந்தன. எல்லோரும் அவரின் கவிதைகளைப் படித்து தன்யர்களாகிக் கொண்டிருந்தார்கள். அப்படி சுவாமியின் மகிமையைத் தெரிந்து கொண்ட 'ஹிப்பரிக' என்ற கிராம மக்கள் ஸ்ரீகுருமூர்த்தியிடம் வந்து அவரை வேண்டி தம் கிராமத்திற்குக் கூட்டிச் சென்றார்கள். அவருக்கு ஒரு விழா செய்து வெகு விமரிசையாக பூஜைகள் செய்தார்கள். அந்த ஊரில் நரகேஸரி என்ற பிராமண புலவர் அங்கு இருக்கும் கல்லேச்வரனை தினமும் ஐந்து புதுப் பாசுரங்களைப் பாடி ஆராதனை செய்வார். அவர் கல்லேச்வரரைத் தவிர வேறு எந்த கடவுளையும் பூஜிக்க மாட்டார். ஸ்ரீகுரு ஊருக்கு வந்த அன்றே சில பிராமணர்கள் நரகேஸரியிடம் வந்து உத்தம பிராமணரே, கவீச்வரா, இன்று நம் ஊருக்கு ஸ்ரீகுரு நரசிம்ம சரசுவதி வந்திருக்கிறார். அவருக்குக் கவிதைகள் என்றால் மிகவும் பிடிக்கும். ஆகையால் நீங்கள் வந்து அவரின் மேல் நல்லதொரு கவிதையைச் சொல்லி அவரை ஆனந்தப்படச் செய்யுங்கள் என்று வேண்டினார்கள். அதற்கு அவர் "நான் என் வாயினால் கல்லேச்வரனை தவிர வேறு எந்தத் தெய்வத்தையும் துதிக்கமாட்டேன். அப்படியான நான் ஒரு மானிடனை எப்படித் துதிப்பேன். ஆகையால் என்னால் நீங்கள் வேண்டியதைச் செய்ய முடியாது" என்றார்.

பிறகு அன்று அவர் குளித்து ஈசனைப் பூஜிக்க ஆலயத்திற்குள் சென்று அவர் முன் உட்கார்ந்தான். அந்த நேரத்தில் அவனுக்குப் பெரும் தூக்கம் வந்தது. தூக்கத்தில் அவன் சிவன் முன் உட்கார்ந்தது போல், தன் முன் இருக்கும் லிங்கத்திற்குப் பதிலாக அங்கே ஸ்ரீகுருமூர்த்தி உட்கார்ந்தது போல் அப்பொழுது அவரை

ஆனந்தத்துடன் பூஜை செய்து போற்றிப் பாடியது போல் கனவு வந்தது. அந்தக் கனவில் ஸ்ரீகுரு அவனிடம் நீ மானிடர்களைப் போற்றமாட்டாயாமே? அப்படியிருக்க நீ ஏன் என்னைப் போற்றிப் பாடினாய் என்று கேட்டார். ஆனால் நரகேஸரி திடமான பக்தியுடன் ஸ்ரீகுருவைக் கனவிலேயே பூஜை செய்து நித்தம் போல் ஐந்து புதுப் பாசுரங்களுடன் துதித்தான். இதற்குள் கனவிலிருந்து விழிப்பு வந்தது.

அப்பொழுது அவன் வியந்து குருமூர்த்தி சாதாரண மானிடர் அல்ல. அவர் அவதார புருஷர். அப்படியான அவரின் மகிமையைத் தெரிந்து கொள்ளாமல் போனேன் என்று வருந்தி தன் தவறைத் திருத்திக் கொண்டு சுவாமியிடம் வந்து சாஷ்டாங்கமாக விழுந்து பாதத்தைத் தொட்டு வணங்கி எழுந்து "சுவாமி உங்கள் ரூபத்தைத் தெரிந்து கொள்ள முடியவில்லை. என்னிடம் கிருபை வையுங்கள். நீங்கள் மானிடர் அல்ல. அந்த சிவ ஸ்வரூபம்தான். அறியாமையால் உங்கள் மகிமையைத் தெரிந்து கொள்ள முடியவில்லை. உலகிற்கு ஆதாரமானவர் நீர்தான். அந்தக் கல்லேச்வரரும் நீர்தான். இனி நான் உங்கள் பாத கமலங்களை விடமாட்டேன். உங்களைச் சரணடைந்தவர்களை விடமாட்டீர்கள்" என்று துதித்தான். அதைக்கேட்ட ஸ்ரீகுரு "ஏனய்யா இதுவரையில் நீ எங்களைக் கேவலம் ஒரு மானிடர்தான் என்றும், மக்கள் எங்களை இப்படி பூஜிப்பது தவறு என்றும் குறை கூறிக் கொண்டிருந்தீர்கள். ஆனால் திடீரென உங்கள் மனம் எப்படி மாறியது" என்று கேட்டார், "சுவாமி இதுவரையில் அறியாமை என்ற இருளில் மூழ்கி இருந்தேன். மன்னியுங்கள். இதுவரையில் நான் கல்லேச்வரனுக்குச் செய்த பூஜைகளின் பயனாய், இன்று உங்கள் பாதசேவை எனக்கு கிடைத்தது" என்று கூறி அன்று கல்லேச்வரன் கோயிலில் தனக்கு வந்த கனவைப் பற்றிக் கூறினான். பிறகு அவரைப் பூஜித்துத் துதித்து தன்னைச் சீடனாக ஏற்றுக் கொள்ள வேண்டினான். அதற்கு சுவாமி "கல்லேச்வரன் என்றால் எங்களுக்கு மிகப் பிரியம். நாங்கள் எப்பவும் அவர் ரூபத்தில் ஹிப்பரிகியில் இருப்போம். ஆதலால் நீ அங்கே இருந்து



எப்பொழுதும் போல் அந்த ரூபத்தில் இருக்கும் எங்களை பூஜை செய்து கொண்டிரு" என்றார். அவன் "ஸ்ரீகுரு மும்மூர்த்தி ரூபமான உங்களைச் சேவித்துக்கொண்டு உங்களிடமே இருக்க வேண்டுமென்று ஆசையாக இருக்கிறது. என் வேண்டுதலை மன்னியுங்கள்" என்று மிக மன்றாடி வேண்டியதற்கு குருமூர்த்தி சரி என்று சொன்னார். அன்று முதல் நரகேஸரி தினமும் கல்லேச்வரனை பூஜை செய்வதைப் போல் செய்து கொண்டு ஐந்து புது பாசுரங்களினால் துதித்து சேவை செய்து கொண்டிருந்தான். நாமதாரகா ஸ்ரீகுருவை எவன் குருபக்தியுடன் சேவை செய்வானோ அவன் வீட்டில் ஸ்ரீகுரு கல்பவிருட்சமாய் வேண்டியதை எல்லாம் கொடுத்துக் கொண்டிருப்பார்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*



## அத்தியாயம் 47

சித்த முனியை நாமதாரகன் மேலும் ஸ்ரீகுருவின் சரித்திரத்தைக் கூறுங்கள் என்று வேண்டினான். நாமதாரகா குரு சரித்திரத்தை மிக ஆர்வமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறாய். இந்த சரித்திரத்தைக் கேட்பதினால் கெட்டவர்கள் கூட நல்லவர்கள் ஆகிவிடுவார்கள்.

ஒருமுறை தீபாவளிப் பண்டிகை நேரம் ஸ்ரீகுருவைப் பார்க்க கானகாபுரத்தைச் சுற்றி இருந்த ஏழு கிராமங்களிலிருந்து ஏழு பக்தர்கள் வந்தார்கள். சுவாமியை வணங்கி சுவாமியிடம் ஒவ்வொருவரும் சுவாமியைத் தங்கள் கிராமத்திற்குத் தீபாவளி அன்று பிச்சைக்கு வரும்படி வேண்டினார்கள். அதற்கு ஸ்ரீகுரு "நீங்கள் ஏழு பேரும் அழைத்தால் நான் ஒருவர் யார் ஊருக்கு வரமுடியும். ஆகையால் நீங்கள் கலந்து பேசி யாராவது ஒருவரின் ஊருக்கு வருவதற்குத் தீர்மானித்துக் கொண்டால் நான் அங்கே வருவேன்" என்றார். அவர்கள் அப்படிக் கலந்து பேசும் பொழுது எல்லோரும் அவரவர் ஊருக்கு வரவேண்டுமென்று பிடிவாதமாக இருந்தார்கள். இதைப் பார்த்த ஸ்ரீகுரு "எனக்கு எல்லோரும் சமமே. ஆகையால் நான் அன்று யாராவது ஒருவரின் ஊருக்கு வருவேன்" என்றார். இதைக்கேட்ட அவர்கள் ஸ்ரீகுருவே நீங்கள் பணக்காரன், ஏழை என்ற பாகுபாடு பார்த்து எங்கள் ஊருக்கு வரவில்லை என்றால் நதியில் விழுந்து விடுவோம். பக்தவத்சலனான ஸ்ரீகிருஷ்ணர் துர்யோதனன் அழைத்தாலும் ஏழையான விதுரர் வீட்டிற்குச் சென்றார். அப்படியே நீங்களும் எங்கள் ஊருக்குத் தான் வரவேண்டும். இதை நீங்கள் முன்கூட்டியே தெரிவித்தால் உங்களை வரவேற்க நாங்கள் தகுந்த ஏற்பாடுசெய்து கொள்வோம் என்று ஒவ்வொருவரும் வேண்டினார்கள். குருமூர்த்தி "நான் கண்டிப்பாக வருவேன் கவலைப்பட வேண்டாம்" என்றார். அதைக்கேட்ட அவர்கள் "உங்கள் பேச்சைக் கேட்டு நீங்கள் யார் ஊருக்கு வருவீரென்று முடிவெடுக்க வேண்டும். ஆகையால் நீங்கள் யார் ஊருக்கு வருவீர்கள் என்று சொன்னால் எங்களின் சந்தேகம் தீர்ந்து



தகுந்த ஏற்பாடுகள் செய்ய முடியும்" என்று வேண்டி அங்கேயே நின்றுவிட்டார்கள்.

அப்பொழுது ஸ்ரீகுரு ஒவ்வொருவராக அழைத்து நாங்கள் உன் ஊருக்குத்தான் வருவோம். இதை மற்றவர்களிடம் சொல்லாமல் ஊருக்குச் சென்று தகுந்த ஏற்பாடுகள் செய்து கொள் என்று ரகசியமாகக் கூறினார். அவர்களும் இதைப் பற்றி ஏதும் பேசிக் கொள்ளாமல் சென்றுவிட்டார்கள். இதைப் பார்த்த கானகாபுரவாசிகள் சுவாமியிடம் வந்து தீபாவளி அன்று நீங்கள் எங்களை விட்டு எங்கும் செல்ல வேண்டாம் என்று வணங்கி வேண்டினார்கள். சுவாமி அவர்களிடம் "நான் எங்கும் செல்லாமல் இங்கேயே இருப்பேன் கவலை வேண்டாம்" என்று கூறினார்.

இதற்குள் தீபாவளி நெருங்கிவிட்டது. த்ரயோதசி இரவு ஸ்ரீகுரு எட்டு ரூபங்கள் எடுத்து ஒரு ரூபத்தில் கானகாபுரத்தில் இருந்து, ஏழு ரூபங்களில் ஏழு கிராமங்களுக்குச் சென்றார். அந்தந்த கிராமவாசிகள் ஸ்ரீகுரு தங்கள் ஊருக்குத்தான் வந்தாரென்று சந்தோஷப்பட்டு சுவாமிக்கு மங்கள நீராட்டு செய்து வெகு விமரிசையாகப் பூஜை செய்து பிச்சை இட்டார்கள். சில நாட்கள் வரை ஸ்ரீகுரு எல்லா ஊர்களுக்குச் சென்றதை எல்லா ஊர்க்காரர்களுக்கும் தெரியாமல் ரகசியமாக இருந்தது. இதற்குள் கார்த்திகை பௌர்ணமி வந்தது. அன்று ஸ்ரீகுருவை தரிசித்து கார்த்திகை தீபத் தோரணங்களை அர்ப்பணம் செய்ய எல்லா கிராமவாசிகளும் கானகாபுரம் வந்தார்கள். அங்கே முன் வந்த ஏழு கிராமவாசிகள் ஒருவருக்கொருவரை பார்த்து தீபாவளி அன்று ஸ்ரீகுரு தங்கள் ஊருக்குத்தான் வந்தாரென்று வாதனை செய்து தாங்கள் அன்று சுவாமிக்குப் போர்த்திய ஆடைகள் மடத்தில் காணலாம் என்று வாதனை செய்து கொண்டிருந்தார்கள். இதைப் பார்த்த கானகாபுரவாசிகள் ஸ்ரீகுரு தீபாவளி அன்று எங்கும் செல்லாமல் இங்கேயே இருந்தார். ஆகையால் நீங்கள் பொய் சொல்கிறீர்கள். வேண்டுமானால் இதை சுவாமியைக் கேட்டு உறுதி செய்து கொள்ளலாம் என்று அவர்களிடம் வாதிட்டார்கள். பிறகு எல்லோரும் சேர்ந்து ஸ்ரீகுருவிடம் சென்று தங்களுக்குள்

நடந்த வாதனை பற்றி கூறினார்கள். இதைக் கேட்ட ஸ்ரீகுரு சிரித்து நீங்கள் எல்லோரும் சொல்வது உண்மை. அன்று நாங்கள் எல்லா ஊர்களுக்கும் சென்றோம். இங்கேயும் இருந்தோம். எங்கள் பக்தர்களின் வேண்டுகோளை நிறைவேற்றுவதுதான் எங்கள் வேலை. ஆகையால் நீங்கள் யாரும் வாதாட வேண்டாம்" என்று கூறினார். இதைக்கேட்ட எல்லோரும் வியப்படைந்து ஸ்ரீகுருவின் மகிமையைப் போற்றினார்கள். எந்தப் புலவராலும் வர்ணிக்க முடியாத இப்படிப்பட்ட லீலைகள் அந்த மும்மூர்த்திகளின் அவதாரமான ஸ்ரீகுருவால்தான் செய்ய முடியும் என்று போற்றினார்கள்.

ஆகவே நாமதாரகா ஸ்ரீகுருவை துதிப்பதற்கு மிஞ்சிய செயல் வேறொன்றுமில்லை. ஸ்ரீகுருவே மும்மூர்த்திகளின் அவதாரம். இந்த இல்லற வாழ்வின் கடலைத் தாண்ட குருவின் பாதசேவை என்ற படகினால் தான் முடியும். என்றும் ஸ்ரீகுருவை திடபக்தியுடன் பூஜிப்பவர்கள் இல்லற வாழ்வின் துன்பங்களை வென்று முக்தியடைவார்கள்" என்று சித்தமுனி கூறினார்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*





*திகம்பரா திகம்பரா ஸ்ரீபாதவல்லப திகம்பரா!*

## அத்தியாயம் 48

நாமதாரகரிடம் "ஸ்ரீகுரு கானகாபுரத்திலிருந்ததினால் அந்த இடத்திற்குப் பெரும் புகழ் கிடைத்தது. அந்த ஊரில் பர்வதேசன் என்ற விவசாயி இருந்தான். அவன் குத்தகைக்கு எடுத்துப் பயிரிடும் வயல் மடத்திலிருந்து சங்கமத்திற்குப் போகும் வழியில் இருக்கிறது. தினமும் காலையில் ஸ்ரீகுரு அனுட்டானத்திற்கு சங்கமம் போகும் பொழுதும், அனுட்டானம் முடித்துக்கொண்டு மத்தியானம் திரும்பி வரும் பொழுதும் பர்வதேசன் ஸ்ரீகுருவை வணங்குவான். இப்படி வெகுநாட்கள் நடந்து கொண்டிருக்கையில் ஒருநாள் சுவாமி அவனிடம் "நீ தினமும் எங்களை வணங்குகிறாய். உன் மனதில் இருக்கும் கோரிக்கை என்னவென்று சொல்" என்று கேட்டார். அதற்கு அவன் "ஸ்ரீகுரு உங்கள் அருளினால் என் வயலில் நல்ல மகசூல் கிடைத்தால் என் குடும்பம் சுகமாக வாழும். அதனை நீங்கள் அருள வேண்டும்" என்று வேண்டினான். அப்பொழுது சுவாமி "உன் வயலில் இப்பொழுது என்ன பயிர் போட்டிருக்கிறாய்" என்று கேட்டார். "சுவாமி சோளம் பயிரிட்டேன். உங்கள் கருணையினால் நன்றாக கதிர்கள் வளர்ந்து வருகின்றன. நீங்கள் நேரில் வந்து உங்கள் காலடிகள் என் வயலில் வைத்தால் மிக ஆனந்தமாக இருக்கும் என என் உள்மனது வேண்டுகிறது. என் வேண்டுதலை ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று வேண்டினான். அவனின் பக்திக்கு சந்தோஷமடைந்து அவனுடன் அவன் வயலின் அருகில் சென்று அவனிடம் "நான் ஒன்று சொல்கிறேன் செய்வாயா?" என்று கேட்டார். அவன் "சுவாமி, நீங்கள் என் குரு. உங்கள் சொல் எனக்கு வேதச் சொல். நீங்கள் என்ன சொன்னாலும் நான் அப்படியே செய்கிறேன். கட்டளையிடுங்கள்" என்று வேண்டினான்.

குருமூர்த்தி அவனிடம் "நான் இப்பொழுது சங்கமத்திற்குச் செல்கிறேன். மத்தியானம் திரும்பி வருவதற்குள் உன் வயலில் இருக்கும் பயிரை முழுவதுமாக அறுவடை செய்துவிடு" என்று கூறி சங்கமத்திற்குச் சென்றுவிட்டார். அதைக்கேட்ட பர்வதேசன்

குருவின் கட்டளை எனக்கு வேதம். ஆகையால் அவர் சொன்னபடி செய்வதுதான் என் கடமை என்று எண்ணி ஊருக்குள் சென்று வயலின் சொந்தக்காரரிடம் சென்று "போன வருடம் கொடுத்த அளவு குத்தகை தருகிறேன். பயிரை அறுவடை செய்ய அனுமதித்து பத்திரம் எழுதிக் கொடுங்கள்" என்று கேட்டான். அதற்கு வயலின் சொந்தக்காரர் "இந்த வருடம் பயிர் நன்றாக இருக்கிறது. ஆகையால் எனக்குப் போன வருடத்தை விட அதிக குத்தகை தர வேண்டும். அப்படி நீ சம்மதித்தால் நான் அனுமதி வழங்குவேன்" என்றார். பர்வதேசன் அதற்கு சம்மதித்து அவரிடம் பயிரை அறுவடை செய்ய அனுமதி எழுதி வாங்கி, பயிரை அறுவடை செய்ய கூலி ஆட்களை அழைத்துக்கொண்டு வயலுக்குச் சென்று அறுவடை செய்யலானார்கள். இதை அறிந்த அவன் மனைவி, மக்கள் வயலுக்கு வந்து பயிரை அறுவடை செய்வதை நிறுத்தப் பார்த்தார்கள். பர்வதேசன் அவர்களிடம் "ஸ்ரீகுரு சொன்னபடி செய்கிறேன். நீங்கள் இங்கிருந்து போகவில்லை என்றால் கல்லால் அடிப்பேன்" என்று கற்களை எடுத்து அவர்கள் மேல் வீச ஆரம்பித்தான். அவர்கள் அங்கிருந்து நிலத்தின் சொந்தக்காரரிடம் சென்று 'என் கணவனுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது. யாரோ ஒரு சன்னியாசி சொன்னாரென்று இன்னும் ஒரு மாதத்தில் நன்றாக கதிர்விட்டு அறுவடைக்கு வரும் பயிரை இளம் பருவத்திலேயே அறுவடை செய்கிறார். நீங்கள் எப்படியாவது அதைத் தடுத்து நிறுத்த வேண்டும்' என்று வேண்டினார்கள். அதற்கு வயலின் சொந்தக்காரர் "அவர் எனக்கு போன வருடத்தை விட இரண்டு மடங்கு குத்தகை தருவதாகக் கூறி என் அனுமதி பெற்றுச் சென்றார். இருந்தும் உங்கள் முறையீட்டை மன்னித்து என் ஆட்களை அனுப்பி நிறுத்த பார்க்கிறேன்" என்று தன் ஆட்களை வயலுக்கு அனுப்பினான். அவர்கள் சென்று எஜமான் பயிரை அறுவடை செய்ய வேண்டாமென்று சொன்னார் என்று பர்வதேசனிடம் சொன்னார்கள். அதற்கு பர்வதேசன் "நான் முன்பைவிட இரண்டு மடங்கு தானியம் தருவதாக எழுதிக் கொடுத்தேன். அப்படி



அவருக்கு என்மேல் நம்பிக்கை இல்லை என்றால் என் வீட்டிலிருக்கும் தானியத்தை இப்பொழுதே எடுத்துக்கொள்ளச் சொல்லுங்கள். அவையும் போதவில்லை என்றால் என் பசுக்கள் இருக்கின்றன. ஆகையால் நான் அறுவடை செய்வதை நிறுத்தமாட்டேன்" என்று சொல்லி அவர்களை அனுப்பி வைத்தார். இதைக்கேட்ட எஜமான் சரி என்று சொல்லிவிட்டார்.

பர்வதேசன் தன் வயலிலுள்ள பயிரை முழுவதுமாக அறுவடை செய்து ஸ்ரீகுரு சங்கமத்திலிருந்து வருவதைப் பார்த்து எதிரே சென்று "சுவாமி நீங்கள் சொன்னதைப் போல் பயிரை அறுவடை செய்துவிட்டேன்" என்று கூற, அவனைப் பார்த்து சுவாமி "ஏனடா, நான் விளையாட்டிற்காகச் சொன்னதை கேட்டு ஏன் இப்படி செய்துவிட்டாய்" என்றார். "சுவாமி உங்கள் வாக்கு எனக்கு காமதேனுவைப் போல். இதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை என்று சொல்ல அவனின் முழு திட நம்பிக்கைக்கும் பக்திக்கும் சந்தோஷப்பட்டு "பயப்படாதே உனக்கு எங்கள் மேல் அவ்வளவு திட நம்பிக்கை இருந்ததால் நல்லதே நடக்கும்" என்று ஆசி வழங்கிச் சென்றுவிட்டார்.

பர்வதேசன் அங்கிருந்து வீட்டிற்குச் செல்லும்பொழுது வழியில் பார்த்தவர்கள் அவனைப் பார்த்து சிரித்தார்கள். ஆனால் அவன் இவை யாவையும் பொருட்படுத்தாமல் சென்றுவிட்டான். வீட்டில் அவன் மனைவி "இந்த வருடம் நல்ல விளைச்சல் வரும் என்று எண்ணினேன். ஆனால் நீங்கள் அது நமக்கு வராமல் செய்துவிட்டீர்கள். உங்களுக்கு என்னவாயிற்று" என்று அழுது கொண்டே கேட்டாள். அதற்கு பாவதேசன் மனைவியை "அறிவில்லாதவளே நீ இப்படி அழைக்கக்கூடாது. குருவின் வாக்கு நமக்கு காமதேனுவைப் போன்றது. அவரின் அருளினால் நமக்கு நிறைய செல்வம் கிடைக்கும். ஸ்ரீகுருவின் மகிமை மூடர்களுக்கு என்ன தெரியும்? நீ கவலைப்படாதே. நமக்கு நல்லதே நடக்கும்" என்று கூறி தேற்றினான். இப்படி இருக்கையில் ஒரு வாரம் கடந்த பின் பெரும் மழையும், சூறாவளிக் காற்றும் அடித்தன. அதனால் அந்த ஊரிலுள்ள வயல்களின் பயிர்களெல்லாம் தரை

மட்டமாகி மழை நீரில் மூழ்கி அழிந்தன. ஆனால் பர்வதேசனின் வயலில் அறுவடை செய்த பயிரின் ஒவ்வொரு கொத்துக்குப் பத்துப் பதினைந்து கொத்துக்கள் வளர்ந்து ஒன்றுக்கு பத்து மடங்கு விளைச்சல் வந்தது. இதைப் பார்த்த ஊர்காரர்களெல்லாம் வியப்படைந்தார்கள். அவன் மனைவி அவனைப் பார்த்து "அய்யா, நான் அறிவில்லாமல் குருவின் மகிமையைத் தெரிந்து கொள்ளாமல் அவரையும் உங்களையும் ஏசினேன். என்னை மன்னியுங்கள்" என்று கூறி குருவிடம் சென்று பாதங்களைத் தொட்டு வணங்கி பூஜித்தார்கள். சுவாமி சிரித்து "என்ன திடீரென வந்து என்னை வணங்குகிறீர்கள்" என்று கேட்டார். அந்த தம்பதிகள் "சுவாமி நீங்கள் எங்களைக் காப்பாற்ற வந்த காமதேனு. உங்கள் அருளினால் எங்கள் வயலில் சாதாரணத்தை விட பத்து மடங்கு விளைச்சல் வந்தது. உங்கள் வாக்கு அமிர்தம் போன்றது. உங்கள் ஆசி எங்கள்பால் உண்மையாயிற்று. நீங்களே எங்களுக்குச் சரணம் என்று போற்றி வணங்கினார்கள். பர்வதேசனின் மனைவி குருவிடம் "சுவாமி அறியாமையினால் உங்களை தூற்றினேன். மன்னித்து எங்களை எப்பொழுதும் இப்படியே அருள வேண்டும். நீங்கள்தான் எங்கள் வழிகாட்டி" என்று வேண்டிக் குருவை அனேக வித பூஜைகள் செய்து ஆரத்தி எடுத்துப் பாதங்களைத் தொட்டு வணங்கினார்கள். நரசிம்மசரசுவதி சுவாமி "நீங்கள் எல்லா செல்வமும் பெற்று ஆனந்தத்துடன் வாழ்வீர்" என்று ஆசி கூறினார். குருவின் அனுமதி பெற்று சந்தோசத்துடன் வீடு திரும்பினார்கள்.

ஒரு மாத காலத்திற்குப் பிறகு பர்வதேசன் பயிரை அறுவடை செய்து வயலின் சொந்தக்காரரைப் பார்த்து நினைத்ததை விட பத்து மடங்கு அதிக விளைச்சல் வந்தது. ஆகையால் பாதி தானியம் எடுத்துக் கொள்ளுங்கள் என்று வேண்டினான், அதற்கு அவர் "இது உன் குரு பக்தியினால் கிடைத்த விளைச்சல். ஆகையால் எனக்கு நாம் செய்த ஒப்பந்தம் போல் தானியத்தைக் கொடுத்தால் போதும்" என்று சொல்லி தனக்கு வரவேண்டிய தானியத்தைப் பெற்றுச் சென்றார், பிறகு பர்வதேசன் அரசருக்குக்



கொடுக்க வேண்டியதைத் தனியாக எடுத்து வைத்து பயிர் நாசமடைந்தவர்களுக்குச் சிறிது தானியம் கொடுத்து மீதியை வீட்டிற்கு எடுத்துச் சென்றான். நாமதாரகா குருமூர்த்தியிடம் திடமான பக்தியும் நம்பிக்கையும் உள்ளவர்களுக்கு எப்பொழுதும் இன்னல்களும் ஏழ்மையும் இருக்காது என்று கூறினார்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*



## அத்தியாயம் 49

நாமதாரகன் சித்த முனியை வணங்கி அய்யா, மும்மூர்த்திகளின் அவதாரமான ஸ்ரீகுரு பாரதநாட்டில் எத்தனையோ புண்ணியத் தலங்கள் இருக்க இந்த கந்தர்வ நகரிலேயே நீண்ட நாள் இருக்க என்ன காரணம்? தயவு கூர்ந்து இத்தலத்தின் மகிமையைக் கூறுங்கள் என்று வேண்டியதற்கு சித்தமுனி "நாமதாரகா ஒரு தீபாவளிக்கு முன் குருமூர்த்தி தன் சீடர்களை, பக்தர்களை அழைத்து நாம் காசி, பிரயாகை, கயா என்ற மூன்று நதிகளுக்கு யாத்திரை போவோம்" என்றார். அதைக் கேட்ட அவர்கள் அப்படியானால் சுவாமி நாங்கள் யாத்திரைக்குத் தேவையான பொருளையும் பணத்தையும் எடுத்துக் கொண்டு குடும்பத்தோடு வருவோம் என்று சொன்னார்கள். சுவாமி சிரித்து "காசி, பிரயாகை, கயா நம் ஊரிலேயே இருக்கின்றன. ஆகையால் நீங்கள் எல்லோரும் உங்கள் குடும்பத்துடன் சங்கமத்திற்கு வாருங்கள்" என்று சொல்ல எல்லோரும் சங்கமத்திற்கு வந்து நதியில் நீராடினார்கள். சுவாமி அவர்களிடம் "இந்த சங்கமம் பிரயாகைக்கு சமமானது. இந்த பீமா, அமரஜ நதி சங்கமம் கங்கை, யமுனை நதிகளின் சங்கமத்திற்கு ஈடானது. இங்கு அமரஜா நதி வடக்குத் திசையாக செல்வதினால் இது காசிக்கு சமானம். இங்கு எட்டு தீர்த்தங்கள் உள்ளன. ஒவ்வொன்றின் மகிமையை முழுமையாகச் சொல்ல முடியாது" என்றார். அப்பொழுது ஒரு பக்தன் "சுவாமி, இந்த நதி எப்படி உருவானது? இதற்கு அமரஜ என்ற பெயர் எப்படி வந்தது?" என்று கேட்டான், அதற்கு ஸ்ரீகுரு "முன்பொரு காலத்தில் அரக்கர்களுக்கும் தேவர்களுக்கும் பயங்கரமான போர் நடந்தது. அதில் ஜாலந்தரன் என்ற அரக்கன் எத்தனையோ தேவர்களைக் கொன்று கொண்டிருந்தான். ஆனால் அப்போரில் இறந்த அரக்கர்களின் இரத்தத் துளிகளிலிருந்து மீண்டும் எத்தனையோ அரக்கர்கள் உருவாகிப் போர் செய்து வந்தார்கள். இதைப் பார்த்த இந்திரன்



செய்வதறியாமல் ஈசனிடம் சென்று "மகாதேவா இந்தப் போரில் நமக்குத் தோல்வி வரும் போல் இருக்கிறது, தேவர்கள் மாண்டு கொண்டே இருக்கிறார்கள். ஆனால் அரக்கர்கள் இறந்தாலும் இரத்தத் துளிகளிலிருந்து உருவாகிப் போர் செய்கிறார்கள். இப்படியே சென்றால் மூன்று உலகிலிருக்கும் தேவர்களெல்லாம் மாண்டு விடுவார்கள். நீங்கள்தான் தேவர்களைக் காப்பாற்ற வேண்டும். இறந்த தேவர்களை எப்படியாவது உயிர் பிழைக்க செய்யுங்கள்" என்று முறையிட்டார். இதைக்கேட்ட ஈசன் கோபமடைந்து அரக்கர்களுடன் போருக்குப் புறப்பட்டு, தேவர்கள் உயிர் பிழைக்க ஒரு குடத்தில் அமிர்தம் கொடுத்து இதைத் தேவர்கள் மேல் தெளிக்கச் செய்து அவர்களை உயிர் பெறச் செய்தார். அப்பொழுது அந்தக் குடத்திலிருந்து சிறிது அமிர்தம் பூமியின் மேல் விழுந்தது. அதுதான் இந்த நதியாக உருவெடுத்தது. அமிர்தத்திலிருந்து உருவானதால் அமரஜ என்ற பெயர் வந்தது. ஆகையால் சஞ்சீவி போன்ற இந்த நீர் எல்லாப் பாவங்களையும் போக்கக்கூடியது. இந்த நதியில் யார் பக்தியுடன் நீராடுகிறார்களோ அவர்களுக்கு அகால மரணம் இருக்காது. துயரங்கள், வியாதிகள் வராது. மேலும் பிராமணர்களையும் பசுக்களையும் கொன்ற பாவங்கள் நீங்கிவிடும். இந்த சங்கமத்தில் வைசாகம் (வைகாசி) கார்த்தீகம் (கார்த்திகை) மாகம் (மாசி) ஆகிய மாதங்களில் நீராடினால் இவ்வுலகில் சுகமாக வாழ்ந்து முக்தி அடைவார்கள். சூரிய, சந்திர கிரகண நேரங்களிலும் பொங்கல் தினத்திலும், ஏகாதசி, பௌர்ணமி முதலிய தினங்களிலும் நீராடினால் எல்லா சுகங்களும் பெறுவார்கள். எப்பொழுதும் இங்கு நீராடுவது மிக்க நன்று.

மேலும் இங்கே இருக்கும் அரச மரத்தின் அருகிலிருக்கும் மனோரத தீர்த்தத்தில் குளித்து இந்த அரச மரத்திற்கு பூஜை செய்து வலம் வந்தால் அவர்களின் மன விருப்பங்கள் நிறைவேறும். நான் எப்பொழுதும் இந்த அரச மரத்தில் குடி கொண்டிருப்பேன். என்னை யார் இந்த அரச மரத்தில் இருப்பதாக எண்ணி பூஜை செய்கிறார்களோ அவர்களை கலியின் பிரபாவம்

ஒன்றும் செய்யாமல் மேலும் அவர்களுக்கு எங்கள் தரிசனம் கிடைக்கும். மேலும் இங்கே இருக்கும் சங்கமேச்வரர் மல்லிகார்ஜுனரைப் போல் சக்தியுடையவர். முதலில் இங்கே நந்தியை வணங்கி பிறகு ஈசனை வலம் வந்து சாஸ்டாங்கமாக வணங்க வேண்டும். இப்படி மூன்று முறை வலம் வந்து இடது கையினால் நந்தியின் வ்ருஷணத்தை பிடித்து, வலது கையின் கட்டை விரலையும், ஆள்காட்டி விரலையும் நந்தயின் கொம்புகளின் மீது வைத்து அந்த விரல்களின் நடுவழியாக சிவலிங்கத்தைத் தரிசிக்க வேண்டும். பக்தியுடன் இப்படிச் செய்தால் வேண்டியதெல்லாம் நிறைவேறும்" என்று கூறி சிறிது தொலைவில் இருக்கும் தீர்த்தத்திடம் சென்று "இதை வாரணாசித் தீர்த்தம் என்று சொல்வார்கள். இது அருகாமையிலிருக்கும் நாகேசமென்ற கிராமத்திலிருந்து வருகிறது. இதைப் பற்றிய கதை ஒன்று இருக்கிறது. முன்பொரு காலத்தில் பரத்வாஜ கோத்திர பிராணமர் ஒருவர் இருந்தார். அவர் எப்பொழுதும் ஈசனைப் பக்தியுடன் ஆராதனை செய்து கொண்டு பித்துப் பிடித்தவன் போல் திரிந்து கொண்டிருந்தார். ஒரு தடவை அவர் சகோதரர்களான ஈச்வரன், பாண்டுரங்கன் காசிக்குப் போக நினைத்துத் தங்களின் அண்ணனான அவரையும் அழைத்தார்கள். அதற்கு அவர் காசி விச்வேஸ்வரன் இங்கே அருகில் இருக்க எங்கேயோ இருக்கும் காசிக்கு ஏன் செல்ல வேண்டும் என்று சொன்னார். அவர்கள் அப்படி என்றால் ஈசனைக் காண்பிக்க முடியுமா? என்று கேட்டார்கள். அப்பொழுது அவர் அங்கே நீராடி சங்கமேச்வரரைப் பார்த்து ஈசா, இந்த இடத்தைக் காசியாக மாற்றி காசி விச்வேச்வரனை இங்கு உள்ளவர்களுக்கெல்லாம் காண்பிப்பாய் என்று வேண்டினார். உடனே அந்த இடம் காசியாக மாறிற்று. காசியில் இருக்கும் தெய்வங்கள் எல்லாம் இங்கே தோன்றின. விச்வேச்வரரும் அங்கே தோன்றினார். அதைப் பார்த்த இரு சகோதரர்கள் வியப்படைந்தார்கள். அவர்கள் அங்கேயே குளித்துவிட்டு காசியில் செய்வது போல் தர்ப்பணங்கள் விட்டு தானங்கள் செய்தார்கள். இந்த நதி வடக்கு நோக்கிச்



செல்லுமிடத்தில் காசி தென்பட்டதால் இதற்கு வாரணாசி தீர்த்தம் என்ற பெயர் வந்தது. அன்று முதல் அந்தப் பிராமணர் தன்னைப் பார்க்க வருபவர்களுக்கெல்லாம் விச்வேச்வரனின் தரிசனம் கிடைக்கச் செய்து வந்தார். இந்தத் தீர்த்தம் பீமா நதியில் கலப்பதினால் இந்த தீர்த்தம் காசித் தீர்த்தத்திற்கு ஈடானது. ஆகையால் நீங்கள் எல்லோரும் இங்கே குளித்து சங்கமேச்வரரை பூஜை செய்யுங்கள்" என்று குருமூர்த்தி கூற எல்லோரும் அங்கே குளித்து ஈசனை பூஜித்தார்கள்.

அங்கிருந்து அவர்கள் பாபவினாசன தீர்த்தத்திற்கு வந்தார்கள். ஸ்ரீகுரு "இங்கே குளித்தால் எல்லாப் பாவங்களும் எரிந்து சாம்பலாகிவிடும்" என்றார். அப்பொழுது அங்கே சுவாமியின் முன் வாசத்தின் சகோதரியான ரத்னாதேவி வந்து சாஸ்டாங்கமாக வணங்கினாள். ஸ்ரீகுரு அவளிடம் "நீ செய்த பாவங்கள் என்னவென்று உனக்குத் தெரியுமா" என்று கேட்டார். அவள் "சுவாமி நான் அறிவில்லாதவள். ஆகையால் அவை என்னவென்று நீங்களே சொல்லுங்கள்" என்று வேண்டினாள். அதற்கு சுவாமி "தண்ணீர் கொதிக்க வைக்கும் பானையில் பூனை ஒன்று ஐந்து குட்டிகளை ஈன்றது. அது தெரியாமல் நீ அதில் தண்ணீரை ஊற்றி கொதிக்க வைத்தாய். அதனால் அந்த பூனைக் குட்டிகள் இறந்தன. அதனால் உனக்கு ஐந்து பூனைகளைக் கொன்ற பாவம் வந்தது. இதுவும் இல்லாமல் மேலும் சில பாவங்களைச் செய்தாய்" என்றார். அதற்குள் அவளுக்குத் தொழுநோய் உடலெல்லாம் பரவியது. அவள் பயந்து சுவாமியின் பாதங்கள் மேல் விழுந்து "ஓ தயாநிதியே! காப்பாற்றுங்கள். என் பாவங்களைப் போக்கிக் கொள்ளத்தான் உங்களை நாடி வந்தேன்" என்று வேண்டினாள். சுவாமி "அம்மா இந்தப் பாவ பலிதம் அடுத்த பிறவியில் அனுபவிப்பாயா அல்லது இந்த பிறவியிலேயே அனுபவித்து அந்தப் பாவங்களைப் போக்கிக் கொள்வாயா" என்று கேட்டார். அவள் "சுவாமி மற்றொரு பிறவி எதற்கு. அவை இப்பொழுதே அகற்றி எனக்குப் பிறவி இல்லாமல் செய்யுங்கள்" என்று வேண்டினாள். சுவாமி "அப்படியானால் நீ

இந்த பாபவினாசன தீர்த்தத்தில் குளித்துவிட்டால் உன் பாவங்கள் எல்லாம் போய்விடும். மேலும் இங்கேயே குடி இருந்து தினமும் இந்தப் பாபவினாசன தீர்த்தத்தில் குளித்து வா. இதனால் ஏழு பிறவிகளில் செய்த பாவங்கள் கூடப் போய்விடும்" என்று கூறினார். சுவாமி சொன்னது போல் ரத்னாதேவி பாபவினாசன தீர்த்தத்தில் குளித்த உடனே தொழுநோய் போய்விட்டது. அதை நான் என் கண்ணாலேயே பார்த்தேன் என்று சித்தமுனி நாமதாரகனிடம் சொன்னார். பின்பு ரத்னாதேவி இந்தத் திருத்தலத்தின் மகிமையை அறிந்ததினால் அங்கேயே குடியிருந்து கொண்டு தினமும் குளித்து சுகமாக வாழுந்தாள்.

பிறகு குருமூர்த்தி அருகில் உள்ள கோடித் தீர்த்தத்திற்குச் சென்று "நம் நாட்டில் எத்தனை தீர்த்தங்கள் இருக்கின்றனவோ அவை யாவும் இங்கே இருக்கின்றன. ஆகையால் தான் இதற்கு கோடித் தீர்த்தமென்று பெயர் வந்தது. இங்கே குளித்தால் கோடிப் பசுக்களைத் தானம் செய்த புண்ணியம் வரும். அதேபோல் இங்கே செய்த தானங்களுக்குக் கோடி மடங்கு செய்த புண்ணியம் கிடைக்கும். இதற்குப் பக்கத்தில் இருக்கும் ருத்திரபாத தீர்த்தத்திற்குச் சென்று இங்கு குளித்து இங்கே இருக்கும் ருத்திரரின் பாதங்களை அர்ச்சனை செய்தால் கோடிப் பிறவிகளில் செய்த பாவமும் போய்விடும். இந்தத் தீர்த்தம் கயைக்கு சமமானது என்று கூறிப் பக்கத்திலிருக்கும் சுக்கிர தீர்த்தத்திற்கு வந்து இந்தத் தீர்த்தத்தில் குளித்து இங்கே இருக்கும் கேசவ சுவாமியைப் பூஜித்தால் ஞானம் பெறுவார் என்று கூறிக் கடைசியாக உள்ள மன்மதத் தீர்த்தத்திற்கு வந்தார். இங்கே இருக்கும் கல்லேஸ்வரர் ஸ்ரீசைல மல்லிகார்ஜுனனுக்கும், கோகர்ண மகாபலேச்வரனுக்கும் சமமானவர். இந்த மன்மதத் தீர்த்தத்தில் குளித்து கல்லேஸ்வரருக்கு ருத்தராபிசேகம் செய்தால் காசி விஸ்வநாதருக்கு ருத்திராபிசேகம் செய்த பலன் வரும். மேலும் ஆவணி (ஸ்ராவண) மாதத்தில் அகண்டாபிசேகமும், கார்த்திகை மாதத்தில் தீப மாலைகளுடன் பூஜை செய்தால் எட்டு சித்திகளும், மோட்சமும் கிடைக்கும்" என்று சொன்னார். 'இதுவரையில் இத்திருத்தலத்தின்



மகிமையை அறியாமலிருந்தோம். உங்கள் கிருபையினால் அதைத் தெரிந்து கொண்டோம்' என்று கூறி எல்லோரும் அந்த எட்டு தீர்த்தங்களில் குளித்து சுவாமி சொன்னது போல் பூஜைகள் செய்தார்கள். பிறகு மடத்திற்கு வந்து சமாராதனை செய்தார்கள்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*



## அத்தியாயம் 50

சித்தமுனி நாமதாரகனிடம் "அப்பனே இந்த குரு சரித்திரத்தின் ஒன்பதாவது அத்தியாயத்தில் ஒரு வண்ணான் ஸ்ரீகுருவின் அருளைப் பெற்று மறுபிறவியில் முகம்மதீய மன்னனாக பிறப்பாய் என்று ஆசி பெற்றானல்லவா. அவன் தற்பொழுது வைடூர்ய நகரத்தின் (தற்பொழுது பீதர்) முகம்மதீய மன்னர் தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்து மன்னனானான். அவன் முற்பிறவியின் நற்குணத்தினால் முகம்மதீயராக இருந்தாலும் நம் கடவுள்களையும், பிராமணர்களையும் நம் திருத்தலங்களையும் ஆதரித்துக் கொண்டிருந்தார். அப்படி இருக்கையில் அவனின் மதகுருக்கள் அவரிடம் "மன்னா நீங்கள் நம் மத கோட்பாடுகளைப் போல் நடந்து கொள்ள வேண்டும். ஆனால் நீங்கள் செய்வது நம் மதக் கோட்பாடுகளுக்கு எதிரானது. இந்துக்கள் அறிவில்லாதவர்கள். அவர்கள் கற்களை, அரசமரம் மற்றும் பல மரங்களை, நதிகளை வழிபடுவார்கள். அப்படி செய்வது மகா பாவமென்று நம் மதம் கூறுகிறது. ஆகையால் நீங்கள் அவர்களின் மத கோட்பாடுகளை ஆச்சாரங்களை, மத குருக்களையும் கௌரவிப்பது நல்லதல்ல" என்று கூறினார்கள். அதைக்கேட்ட மன்னர் "உலகில் வாழும் உயிர்கள் அனைத்தும் கடவுளின் படைப்புகளே. கடவுள் உலகம் முழுவதும் நிறைந்திருக்கின்றார். பசுக்கள் வேறானாலும் அவற்றின் பால் ஒன்றுதான். நகைகள் வேறானாலும் தங்கம் ஒன்றுதான். அப்படியே படைப்புகள் வேறானாலும் படைத்த கடவுள் ஒருவரே. அப்படியான கடவுளிடம் மனதை ஒருங்கிணைக்க அவர்கள் சிலைகளையும் மரங்களையும் பிராணிகளையும் பூஜிக்கிறார்கள். நம் குரான் நமக்கு எப்படியோ, அவர்களுக்கு வேதங்களும் அப்படியே. ஆகையால் அவரவர்கள் அவர்களின் மதம் சொற்படி நடந்து கொள்ள வேண்டுமே தவிர மற்ற மதத்தவரைக் குறை சொல்லக் கூடாது" என்று அவர்களுக்கு புத்திமதி கூறினார். இதைக்கேட்ட அவர்கள் மேலும் பேசாமல் இருந்தார்கள்.

இப்படி இருக்கையில் மன்னருக்கு விதி வசத்தினாலயோ



கடவுள் யோகத்தினாலேயோ தொடையில் புண் வந்தது. எவ்வளவோ வைத்தியம் செய்தாலும் அது குறையாமல் அதிகரித்துக் கொண்டே இருந்தது. கடைசியில் மன்னர் ஓர் பிராமணரை அழைத்து 'எனக்கு வந்த புண் போகும் உபாயம் தெரிவிக்கும்படி' கேட்டார். அதற்கு பிராமணர், "ராஜா நீங்களோ முகம்மதீயர். நானோ பிராமணர். நான் உபாயம் சொல்லியதையும் அதை நீங்கள் கேட்டதும் உங்கள் மத குருக்களுக்குத் தெரிந்தால் அவர்கள் என்னையும் உங்களையும் வாழ விட மாட்டார்கள். ஆகையால் நீங்கள் ஒரு தனிமையான இடத்திற்கு வந்தால் சொல்கிறேன்" என்றார். இருவரும் தனிமையான இடத்திற்குச் சென்றார்கள். அங்கே அந்த பிராமணர், "மன்னா, முற்பிறவியில் செய்த பாவங்கள்தான் வியாதிகளாக வரும். தீர்த்த யாத்திரை, தானங்கள், தேவதைகளை பூஜை செய்வதினால் வியாதிகள் போய்விடும். நல்லோர், சாதுக்கள், குருக்கள் இவர்களின் தரிசனத்தினால் எல்லா வியாதிகளும் பாவங்களும் போய்விடும். ஆகையால் மன்னா நம் நகரின் அருகிலுள்ள பாபநாச தீர்த்தத்திற்குச் சென்று அங்கு நீராடி தானங்கள் செய்தால் உங்கள் வியாதி போகும் வழி கிடைக்கும்" என்று சொன்னார். மன்னரும் அவர் சொன்னதைப் போல் அங்கே சென்று தினமும் பாபநாச தீர்த்தத்தில் நீராடி இரகசியமாக இருந்தார். இப்படி செய்து கொண்டிருக்கையில் ஒரு நாள் அவருக்கு அங்கே ஒரு யதீச்வரன் தென்பட்டார். உடனே மன்னர் அவரின் பாதங்களைத் தொட்டு வணங்கி அவரிடம் அவருக்கு இருந்த புண்ணைப் பற்றி கூறி அது குணமடையும் உபாயத்தை சொல்ல வேண்டினார். அதற்கு அந்த யதி "மன்னா சாதுக்களின் தரிசனத்தால் எல்லா வியாதிகளும் பாவங்களும் போய்விடும்" என்று கூறினார். அதைக் கேட்ட மன்னர் "அய்யா, நான் முகமதீயரென்று நினைக்காதீர்கள். நான் உங்கள் மத தர்மத்தையும் ஆதரிக்கிறேன். ஆகையால் சாதுக்களின் ஆசியை பெற்று குணமடைந்தவர்களின் வரலாறு இருந்தால் சொல்லுங்கள். கேட்க ஆசையாக உள்ளது" என்றார்.

அந்தி யதி "மன்னா அவந்தி நகரத்தில் ஒரு பிராமணர்

இருந்தார். அவர் பிராமணராக இருந்தாலும் கெட்ட வழிகளில் நடந்து கொண்டிருந்தான், அவன் பிற பெண்களை நாடிச் சுற்றிக் கொண்டிருப்பான். பிங்களி என்ற வேசியின் வீட்டிலேயே எப்பொழுதும் குடித்துத் தங்கி இருப்பான். ஒருநாள் மாலையில் அந்த வீட்டின் முன்பாக ருஷபயோகி என்ற மகான் சென்று கொண்டிருந்தார். அவரை இந்தப் பிராமணரும் பிங்களியும் பார்த்துப் பக்தியுடன் சாஸ்டாங்கமாக வணங்கி வீட்டிற்குள் அழைத்துச் சென்று அவர் பாதங்களைக் கழுவி அந்த நீரைத் தலையில் தெளித்துக் கொண்டு பூஜை செய்தார்கள். பிறகு அவருக்கு சுவையான உணவை வழங்கிச் சாப்பிட செய்து அவருக்குப் பாதசேவை செய்து உறங்க வைத்தார்கள். மறுநாள் காலையில் ருஷபயோகி அவர்களை ஆசி கூறிச் சென்றுவிட்டார்.

அவர்கள் சில காலத்திற்குப் பின் வயதாகி இறந்து விட்டார்கள். ஒருநாள் பக்தியுடன் சாது சேவை செய்த புண்ணியத்தால் அந்த பிராமணர் தசார்ண நாட்டின் மன்னர் வஜ்ரபாகுவின் முதல் மனைவி சுமதியின் கர்ப்பத்தில் விழுந்தான். மன்னரின் இரண்டாவது மனைவி தனக்குப் பிள்ளைகள் பிறக்காமல் இருக்கும்பொழுது முதல் மனைவியான சுமதிக்கு பிள்ளை பிறந்தால் மன்னருக்குத் தன்மேல் அன்பு குறையும் என்று நினைத்து சுமதிக்கு சாப்பாட்டில் விஷத்தை கலந்து கொடுத்தாள். இதனால் சுமதி உயிருக்கு ஒன்றும் ஆகாமல் உடலெல்லாம் புண்கள் வந்தன. மாதங்கள் நிறைந்த பிறகு அவளுக்கு மகன் பிறந்தான். ஆனால் விஷத்தின் கடுமையினால் அவனுக்கு உடலில் புண்கள் இருந்தன. இதைப் பார்த்த மன்னர் இருவருக்கும் எவ்வளவோ வைத்தியம் செய்தார். இருந்தும் அவர்களின் புண்கள் குணமடையாமல் சீழ் பிடித்து துர்நாற்றம் வீசத் தொடங்கின. இதைப் பார்த்த மன்னரின் இரண்டாவது மனைவி "மன்னா இவர்கள் முற்பிறவியில் எவ்வளவோ பாவங்கள் செய்திருக்கிறார்கள். ஆகையால் இவர்களின் வியாதி குணமடையவில்லை. இப்பேர்ப்பட்ட பாவிகளின் முகம் பார்த்தால் நமக்கும் பாவம் வரும். ஆகையால் இவர்களை வெளியே



விட்டுவிடுங்கள்" என்று சொன்னாள். அதை கேட்ட மன்னரும் இதுதான் சரி என்று நினைத்து அவ்விருவரையும் காட்டில் விட்டுவிடச் செய்தார். இதற்கு மன்னரின் இரண்டாவது மனைவி ஆனந்தப்பட்டாள்.

காட்டில் முற்புதர் நடுவிலும் கற்களிலும் நடக்க முடியாமல் மிக அவதிப்பட்டனர். மிருகங்களின் கர்ஜனைகளைக் கேட்டும், பாம்புகள், காட்டு மிருகங்களைப் பார்த்தும், பயந்து போய் பசியினால் அவதிபட்டு தாகத்திற்கு தண்ணீருக்காக காட்டில் அலைந்து கொண்டிருக்கையில் ஒரு இடத்தில் பசுக்களை மேய்த்துக் கொண்டிருந்தவர்கள் தென்பட்டார்கள். அவர்களிடம் இங்கு எங்காவது குடிக்கத் தண்ணீர் கிடைக்குமா என்று கேட்டாள். அவர்கள் எங்கள் ஊர் அருகில்தான் இருக்கிறது. அங்கே வந்து நீங்கள் தாகத்தைத் தீர்த்துக் கொள்ளலாம் என்று கூறி அவ்விருவரையும் தங்கள் ஊருக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே சென்று அந்த ஊரை ஆண்டு கொண்டிருந்த வணிக குலத்தைச் சார்ந்த பத்மாகரனை சந்தித்து தன்னைப் பற்றி முழுவதுமாக கூறி அவரிடம் தஞ்சம் கேட்டார்கள். பத்மாகரன் ராணியின் வேதனையைப் பார்த்து தங்குவதற்கு இடமளித்து, உண்ண வசதியையும் செய்து புண்களைப் போக்க வைத்தியமும் செய்ய ஆரம்பித்தார். எவ்வளவு வைத்தியம் செய்தாலும் புண்கள் போகவில்லை. சில நாட்களில் ராணி சுமதியின் குழந்தை இறந்துவிட்டான். சுமதி மகன் இறந்ததைப் பார்த்து மிக வேதனைப்பட்டு அழுதாள். அவளின் அதிர்ஷ்டத்தால் அந்த நேரத்தில் ருஷபயோகி அங்கே வந்தார். அவர் அவளைப் பார்த்து "அம்மா உன் மூடத்தனத்தால் அழுகிறாய். பிறப்பது யார், இறப்பது யார். ஐந்து பொருட்களால் (பஞ்சபூதங்கள்) ஆன இந்த உடலில் இருப்பது ஆத்மாதான். அவனவன் கர்மா முடிந்தவுடன் ஆத்மா அந்த உடலை விட்டு வேறு உடலுக்குள் சென்றுவிடும். ஆத்மா உடலை விட்டு பிரிந்தவுடனே உடல் உபயோகமற்றதாகி அழுகிவிடும். முக்குணங்களால் மனிதன் கர்மாக்களில் சிக்கிக் கொள்வான். அதில் சத்வ குணத்தினால் தைவத்வம், ரஜோ

குணத்தினால் மனிதத் தன்மை, தமோ குணத்தினால் அரக்க தன்மையுடன் பிறப்பார்கள். முக்குணங்களுக்கு அப்பாற்பட்ட நிலை வந்தால் தான் பிறவியிலிருந்து விடுதலை கிடைக்கும். மரண சமயத்தில் எந்த குணம் அதிகமாக இருக்குமோ அடுத்த பிறவியில் அந்தக் குணத்தின் ஆதிக்கத்தில் பிறப்பான். இந்த உலகில் பிறக்கும் எல்லோருக்கும் சுக துக்கங்கள், பிறப்பும், மரணமும் அவரவர் செய்யும் கர்மாவைப் பொறுத்துக் கிடைக்கும். பிறந்த எல்லோரும் மரணமடைய வேண்டியது நியதி. ஆதலால் விவேகமுள்ளவர்கள் பிறப்புக்காக சந்தோஷமும், இறப்புக்காக துக்கமும் அடைய மாட்டார்கள். இதனைவிட பகவானின் நாமசங்கீர்த்தனத்தால் இல்வாழ்வில் சுகமும் முக்தியும் பெறலாம். முற்பிறவிகளில் நீ யாருக்கு தாயாகினாயோ, யாருக்கு மனைவியாகினாயோ, உன் உறவுக்காரர்கள் யாரென்றும் தெரியுமா? ஆகையால் நீ துக்கப்படுவதை நிறுத்தி, என் பேச்சைக் கேட்டு ஈசனை சரணடைந்தால் நல்லது நடக்கும்" என்று போதனை செய்தார்.

அவள் "ஹே பரமாத்மா! நான் ஒரு நாட்டின் ராணியாகியும் எனக்கு இந்தத் துன்பங்கள் வந்தன. அந்தத் துன்பங்களிலும் இந்தப் பிள்ளைக்காக வாழ்ந்து கொண்டிருந்தேன். நான் யாருக்காக வாழ்ந்து கொண்டிருந்தேனோ அவன் இறந்த பின் நான் வாழ்வதில் அர்த்தமில்லை. ஆகையால் இறந்து விடுவேன்" என்று சொல்லி தற்கொலைக்கு முயற்சித்தாள். அப்பொழுது முனி இவன் முற்பிறவியில் தன்னை பூஜித்தவன் என்று அறிந்து அவளைத் தற்கொலை முயற்சியிலிருந்து நிறுத்தி சிறிது பஸ்மத்தை மந்தரித்து குழந்தை மேல் தூவினார். உடனே அந்தக் குழந்தை உயிர் பெற்று, உடலிலிருந்த புண்களெல்லாம் போய் பொன்னிற உடலைப் பெற்றான். இன்னும் சிறிது பஸ்மத்தையும் அதேபோல் சுமதியின் மேல் தூவினார். அதனால் அவளின் புண்களும் போய் பொன்னிற உடலை பெற்றாள். உடனே அவ்விருவரும் ருஷபயோகியின் பாதங்களில் விழுந்து வணங்கினார்கள். அம்முனி அந்தக் குழந்தையைப் பார்த்து "இவன் நற்குணங்கள்



பெற்று நல்ல பெயர் பெற்று பத்ராயுவு என்ற பெயருடன் நாட்டை நன்றாக ஆண்டு பெரும் புகழ் பெறுவான்" என்று ஆசி வழங்கிச் சென்றார்.

ஆகையால் மன்னா மகாத்மாக்களின் அருளால் எப்படிப்பட்ட வியாதியும் குணமடையும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை என்றார். அந்த முகம்மதீய மன்னர் "யதீச்வரனே இக்காலத்தில் அப்படியான மகாத்மா இருந்தால் சொல்லுங்கள். நான் உடனே அவரிடம் சென்று தஞ்சம் அடைவேன்" என்றார். அந்த யதி "மன்னா, பீமா, அமரஜா நதிகளின் சங்கமத்தினருகே கானகாபுரத்தில் பகவானான ஸ்ரீநரசிம்ம சரசுவதி யதிகள் இருக்கிறார். நீ அவரைத் தரிசித்தால் நன்மை நடக்கும்" என்று கூறி அந்த யதி சென்றுவிட்டார்.

சரியாக அதே நேரத்தில் கானகாபுரத்தில் ஸ்ரீகுரு இங்கே ஒரு முகம்மதீய மன்னர் வரப் போகிறார். ஆதலால் இங்கே இருக்கும் இந்துக்களுக்கு வேதனை ஏற்படலாம். இங்கே இதர மதத்தினர், ஆசாரம் இல்லாதவர்கள், பேராசை கொண்டவர்களும் வரக்கூடும். மேலும் கலியுகத்தில் எங்களின் அவதாரம் முடிவடையும் நேரம் வந்துவிட்டது. பகுதான்ய வருடத்தில் சிம்மராசிக்கு குரு பெயர்ச்சி நடக்கும் பொழுது கௌதமி நதிக்கு புஷ்கரம் வரும். அந்த புஷ்கருத்துக்குச் செல்லும் எண்ணத்தைச் சொல்லி இங்கிருந்து சென்றுவிடுவோம் என்று நிச்சயம் செய்து அங்கிருந்த பக்தர்களிடம் "இங்கே ஒரு முகம்மதீய மன்னர் வர இருக்கிறார். உங்களுக்கு களங்கம் ஏற்படலாம். ஆகையால் நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் சென்றுவிடுங்கள்" என்று கூறினார். அதற்கு அவர்கள் "சுவாமி., தர்மத்தையும், பக்தர்களையும் காக்கும் நீங்கள் இருக்கும் பொழுது எங்களுக்கு ஒன்றும் நேரிடாது" என்று சொல்லி யாரும் அங்கிருந்து செல்லவில்லை. இதற்குள் முகம்மதீய மன்னர் மடத்தினருகில் வந்து ஸ்ரீகுரு எங்கே இருக்கிறார் என்று கேட்டார். குருமூர்த்தி சொன்னது மனதில் நினைவுக்குவர யாரும் ஸ்ரீகுருவை பற்றிக் கூறாமல் மௌனமாக இருந்தார்கள். அதைப் பார்த்த அந்த மன்னர்

அவர்களிடம் "அய்யா நான் முகம்மதீய மன்னராக இருந்தாலும் என் நாட்டில் உங்கள் மதத்தையும் உங்களையும் கௌரவிக்கிறேன். நான் சுவாமியை வேண்ட வந்தவனே. ஆகையால் தயவு கூர்ந்து சுவாமி இருக்கும் இடத்தைச் சொல்லுங்கள் என்று வேதனையுடன் மன்றாடினான். அவரின் வேதனை பார்த்து "சுவாமி அனுட்டானத்திற்காக சங்கமத்திற்கு சென்றிருக்கிறார். மத்தியான சமயத்திற்கு இங்கே வந்துவிடுவார்" என்று கூறினார்கள். உடனே மன்னர் தன்னுடன் வந்த பரிவாரங்களை அங்கேயே விட்டுவிட்டு, தனியாக, வேகமாக சங்கமத்திற்குச் சென்று சுவாமியைப் பார்த்து சாஸ்டாங்கமாக வணங்கி நின்றான்.

சுவாமி மன்னரைப் பார்த்து "எனது சேவகனான உன்னை எத்தனை நாள் கழித்துப் பார்த்தேன்" என்று கூறி அவனிடம் தன் கருணைப் பார்வையை செலுத்தினார். உடனே மன்னருக்கு முற்பிறவியின் நினைவு வந்து உடலெல்லாம் சிலிர்த்தது. ஒரு மயக்க நிலை வந்தது. இதிலிருந்து மீண்டு ஆனந்தத்துடன் கண்களில் நீர் வர சுவாமியை வணங்கி "தேவா நான் முற்பிறவியில் உங்கள் சேவகனான வண்ணான்தான். இந்த ஏழையை இத்தனை நாள் ஏன் உதறி விட்டீர்கள். அரச போகங்களில் விழுந்து இத்தனை நாள் உங்களை மறந்தேன். முன்பு நான் சேவித்த உங்கள் பாதங்களை கண்டு கொள்ள முடியவில்லை. என்னை ஆசிர்வதித்து பிறவிகள் இல்லாமல் முக்தி பெறுமாறு செய்யுங்கள்" என்று வேண்டினான். சுவாமி அப்படியே ஆகட்டும் என்று ஆசிர்வதித்தார். உடனே அந்த மன்னர் தனக்கு வேதனை கொடுத்துக் கொண்டிருந்த புண்ணை குணமாக்க சொல்லி வேண்டினார். அதற்கு குரு எங்கே உன் புண்ணைக் காண்பி என்று கேட்டார். மன்னர் தொடையிலிருந்த கட்டை அவிழ்த்துப் பார்க்க அங்கே இருந்த புண் வடுவு இல்லாமல் போயிற்று. அதைப் பார்த்த மன்னர் ஆச்சரியப்பட்டு சந்தோஷமடைந்து சுவாமியின் பாதங்களில் விழுந்து வணங்கி "சுவாமி உங்கள் அருளினால் அரசனானேன். செல்வங்களுக்கு



அளவே இல்லை. பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் இருக்கிறார்கள். எனக்கு எந்தக் குறையும் இல்லை. ஆனால் நீங்கள் கொடுத்த செல்வத்தை நீங்களே நேரில் பார்க்க வேண்டுமென்ற ஆசை இருக்கிறது. அதை நீங்கள் நிறைவேற்றி விட்டால் நான் அனைத்தையும் விட்டுவிட்டு உங்கள் பாதங்கள் அருகில் இருந்து சேவித்துக் கொண்டிருப்பேன்" என்று வேண்டினான். அதற்கு சுவாமி "டேய் சன்னியாசிகளான நாங்கள் உங்கள் முகம்மதீய ராஜ்ஜியத்திற்கு வருவது நல்லதல்ல. மேலும் நீங்கள் பசுக்களைக் கொன்று உண்ணுவது எங்கள் மதாசாரத்திற்கு எதிரானது. ஆகையால் நாங்கள் எப்படி அங்கே வர முடியும்" என்றார். அதற்கு அவன் வேதனையுடன் "நான் தற்பொழுது முகம்மதீயராகப் பிறந்தாலும் முற்பிறவியில் உங்கள் சேவகன்தான். அதுவுமில்லாமல் இந்த அரச பதவியும் செல்வமும் நீங்கள் கொடுத்த வரம்தான். ஆகையால் நீங்கள் ஒருமுறை என் நாட்டிற்கு வந்து என் பிள்ளைகளை, பேரப் பிள்ளைகளைப் பார்த்தால் எனக்கு சந்தோஷமாகும்" என்று மீண்டும் மீண்டும் வேண்டினான்.

இப்படி அந்த மன்னன் வேண்ட, குருமூர்த்தி மனதில் நான் இனிமேல் இந்த உலகில் இருக்கக்கூடாது. அப்படி இருந்தால் கெட்டவர்கள், பாவிகள் நம்மிடம் வந்து சேருவார்கள். கலியுகம் பிரபலமாகிக் கொண்டிருக்கிறது. ஆகையால் முற்பிறவியில் என் சேவகனான இவனின் வேண்டுதலை நிறைவேற்றி, கிரகங்களில் ஒன்றான குரு சிம்மராசிக்கு பெயரும் போது வரும் கௌதமிநதி புஷ்கரத்திற்குச் செல்ல வேண்டுமென்ற காரணத்தைச் சொல்லி அங்கே சென்று மறைந்து விட வேண்டுமென்று நினைத்து அரசனின் வேண்டுதலை அங்கீகரித்தார்.

முகம்மதீய மன்னர் சந்தோஷமடைந்து ஸ்ரீகுருவை பல்லக்கில் அமர வைத்து குருவின் பாதுகைகளைத் தலையின் மேல் வைத்துக் கொண்டு நடந்து வந்தான். அதைப் பார்த்த சுவாமி "நீ ஒரு மன்னன். இப்படிப் பாதுகைகளைத் தூக்கிக் கொண்டு

நடந்து வருவதை உங்கள் குருமார்கள் பார்த்தால் உன்னை ஏசுவார்கள்" என்று சொல்ல அவன் "சுவாமி நான் மன்னன் எப்படி ஆவேன்? நான் உங்களின் சேவகனான வண்ணான் தான். பருசவேதி தொட்டத்தினால் இரும்பு தங்கமாக மாறும் ரீதியாக உங்கள் அருளினால் மன்னரானேன். நீங்கள் தான் மன்னர். நான் உங்கள் சேவகன்" என்று சொல்லிக் கொண்டு மடத்தினருகில் வந்து தன்னுடைய ரதங்கள், குதிரைப் படைகளை சுவாமிக்குக் காண்பித்தான். குருமூர்த்தி அவைகளைப் பார்த்து சந்தோஷமடைந்து அவனிடம் "நாம் வெகு தூரம் செல்ல வேண்டும். என் கட்டளைப்படி குதிரை மேல் ஏறி வா" என்றார். மன்னரும் அப்படியே செய்து எல்லோரும் புறப்பட்டார்கள். சிறிது தூரம் சென்ற பிறகு சுவாமி மன்னரிடம் "நாங்கள் உன்னுடன் வந்தால் எங்களின் அனுட்டானம் தடைபட்டுவிடும். ஆகையால் நாங்கள் வேகமாக சென்று உன் வைடூர்ய நகரத்தில் உள்ள பாபநாச தீர்த்தத்தின் அருகில் இருப்போம். எங்களுடன் அங்கே வந்து சேருங்கள்" என்று கூறி கண் இமைக்கும் நேரத்தில் சுவாமி மாயமாகிவிட்டார். அப்படி மாயமாகி சுவாமி வைடூர்ய நகரத்தில் உள்ள பாபநாச தீர்த்தத்தினிடம் சென்று நீராடி அனுட்டானம் செய்து கொண்டிருந்தார். சுவாமி அங்கு வந்தது வைடூர்ய நகரத்தில் இருக்கும் சாயம்தேவனின் மகன் நாகநாதன் தெரிந்து கொண்டு சுவாமியிடம் சென்று சீடர்களுடன் அவரைத் தன் வீட்டிற்கு அழைத்து அவருக்கு சகலவிதமான பூஜைகள் செய்து பிட்சை செய்தான். அப்பொழுது சுவாமி நாகநாதனிடம் "உங்கள் நாட்டின் முகம்மதீய மன்னர் என்னைத் தேடி பாபநாச தீர்த்தத்திற்கு வந்து நான் இங்கே இருப்பது தெரிந்து கொண்டு இங்கே வரலாம், அவர் இங்கே வந்தால் உங்கள் ஆசாரங்களுக்கு வில்லங்கம் ஏற்படலாம். ஆகையால் நான் இங்கிருந்து சென்று விடுவேன்" என்று சொல்லிச் சீடர்களுடன் சென்றார்.

இதற்குள் மன்னர் சுவாமியின் சக்தி தெரிந்தவரானதால் சுவாமியைத் துதித்துக் கொண்டு பரிவாரங்களுடன் வேகமாகப் பயணித்து மாலை நேரத்திற்கு சுவாமி இருக்குமிடத்திற்கு வந்து



சேர்ந்தான். நகரை அழகாக அலங்கரிக்கச் சொல்லி சுவாமியை வணங்கி நகருக்குள் வரச்சொல்லி அழைத்தார். சுவாமி பல்லக்கில் வர மன்னர் தன் பரிவாரங்களுடன் சுவாமியுடன் நடந்து நகரெல்லாம் ஊர்வலமாக அழைத்துச் சென்றார். அந்த ஊர்வலத்தின் போது இந்துக்கள், நல்லோர்கள் எல்லோரும் சுவாமிக்கு ஆரத்தி எடுத்தார்கள். மன்னர் பிற மதத்தின் சன்னியாசியை வணங்கி, ஊர்வலம் செய்வதைப் பார்த்து முகம்மதீயர்கள் மன்னரைத் தூற்றினார்கள். ஆனால் அங்குள்ள நல்லோர்கள் மன்னர் செய்யும் இந்தச் செயலுக்கு அவரைப் போற்றினார்கள்.

ஊர்வலம் அரச மாளிகை அருகில் வந்தடைந்தவுடன் சுவாமியை தரையின்மேல் நடக்கவிடாமல் வழியில் புதுத் துணிகள் போட்டு அவற்றின் மேல் நடக்கவைத்து மாளிகைக்கு அழைத்துச் சென்று சிம்மாசனத்தில் அமர வைத்து அவரே வெண்சாமரைகள் வீசலானார். தன் ராணிகளையும், அந்தபுரப் பெண்களையும் பிள்ளைகளையும், பேரன்களையும் வரவழைத்து சுவாமிக்கு பாதபூஜை செய்ய வைத்தார். சுவாமி எல்லோரையும் ஆசீர்வதித்து மன்னரைப் பார்த்து "உன் கோரிக்கை நிறைவேறியதா" என்று கேட்டார். அதற்கு மன்னர் "சுவாமி இனி வாழ்வு முழுவதும் உங்கள் சேவை தவிர வேறெந்தக் கோரிக்கையும் இல்லை" என்று சொன்னார். "அப்படி என்றால் அரச பொறுப்புகளை உன் மகன்களிடம் ஒப்படைத்து நீ ஸ்ரீசைலம் வந்திடு. அங்கே மீண்டும் எங்களைப் பார்க்கலாம்" என்று கூறி தன் சீடர்களுடன் புறப்பட்டு கோதாவரி நதியில் நீராடி மடத்திற்கு வந்து விட்டார்கள். காணகாபுரவாசிகள் சுவாமியை வணாங்கி பூஜை செய்தார்கள்.

அவர்களைப் பார்த்து சுவாமி எங்கள் புகழ் உலகமெல்லாம் தெரிந்து விட்டது. கலியுகத்தில் தீய செயல்கள் அதிகரிக்கும். ஆதலால் தீயவர்கள், மோசக்காரர்கள், பிற மதத்தினர் இங்கு வந்து எங்களை துன்பப்படுத்துவார்கள். அதன் பொருட்டு நாங்கள் ஸ்ரீசைலம் சென்று விடுவோம். ஆனாலும் பக்தர்களைக் காப்பாற்ற

மறைமுகமாக இங்கேயே இருப்போம் என்றார்.

நாமதாரகா அன்றுவரை மனித உருவில் இருந்த ஸ்ரீகுரு மறைமுகமாக அங்கேயே இருந்து இன்று வரை பக்தியுடன் தன்னை நாடி வரும் பக்தர்களைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார். ஆகையால் எல்லோரும் பக்தியுடன் கானகாபுரம் சென்று குரு சரித்திரத்தை பாராயணம் செய்து ஸ்ரீகுருவின் அருளையும், ஆசியையும் பெறுங்கள் என்று சித்தமுனி கூறினார்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*





*திகம்பரா திகம்பரா ஸ்ரீபாதவல்லப திகம்பரா!*

## அத்தியாயம் 51

நாமதாரகா அப்பொழுது சுவாமி, சீடர்கள் பக்தர்களிடம் தான் ஸ்ரீசைலம் செல்வதைச் சொன்னார். அதைக் கேட்ட அவர்கள் ஸ்ரீகுருவின் பிரிவை நினைத்து அழ ஆரம்பித்தார்கள். சுவாமி அவர்களைத் தேற்றி "நீங்கள் அழாதீர்கள். நான் உருவத்தில் இங்கு இல்லை என்றாலும் மறைமுகமாக இங்கேயே இருந்து நித்தமும் பீம, அமரஜ சங்கமத்தில் நீராடி மத்தியான நேரத்தில் பிச்சைக்கு வருவேன். நான் மறைமுகமாக இருந்தாலும் உண்மையான என் பக்தர்களுக்கு நேரில் தோன்றி தரிசனம் தருவேன். மடத்தில் செய்யும் உங்கள் பூஜைகளையும் நான் பெறுவேன். இங்கே என் நிர்குண பாதுகைகளை (சுவாமி தன் சக்தியை அவற்றினுள் செலுத்தி பிரதிஷ்டை செய்த பாதுகைகளின் அளவிலான சிலைகள்) பிரதிஷ்டை செய்கிறேன். எவனொருவன் சங்கமத்தில் நீராடி அங்கிருக்கும் அரச மரத்தைச் சுற்றிப் பூஜை செய்து மடத்திற்கு வந்து என் நிர்குண பாதுகைகளை பக்தியுடன் சிரத்தையுடன் அர்ச்சனை செய்வார்களோ அவர்களின் எண்ணங்கள், கோரிக்கைகள் கண்டிப்பாக நிறைவேறும். இது சத்தியம். இங்கிருக்கும் சிந்தாமணி விநாயகரைப் பூஜிப்பவர்களின் எல்லாக் காரியங்களும் தடைகள் இல்லாமல் நிறைறேவறும். இந்த எட்டுத் தீர்த்தங்களில் நீராடுபவர்கள் என் அனுக்கிரகத்தைப் பெறுவார்கள்" என்று சமாதானப்படுத்தி சுவாமி கானகாபுரத்திலிருந்து புறப்பட்டார். ஊர்க்காரர்கள் சுவாமியை வழியனுப்பி மன வேதனையுடன் மடத்திற்கு வந்து பார்க்க அங்கே சுவாமி அவர்களுக்கு தரிசனம் தந்தார். அதைப் பார்த்த அவர்கள் ஸ்ரீகுரு மும்மூத்திகளின் அவதாரமே தவிர வேறு யாருமில்லை என்று எண்ணினார்கள். கண் இமைக்கும் நேரத்தில் ஸ்ரீகுரு அங்கிருந்து மறைந்தார்.

ஸ்ரீகுரு, சாயம்தேவன், நந்திசர்மா, நரஹரிகவி ஆகியோருடன் நானும் ஸ்ரீசைலத்தில் பாதாளகங்கையைச் சென்றடைந்தோம்.

எங்களிடம் வாழை இலைகள், பூக்களுடன் ஓர் ஓடத்தைத் தயார் செய்யச் சொல்லி அதில் தான் மல்லிகார்ஜுனருடன் ஐக்கியமாகிவிடுவேன் என்று கூறினார். ஸ்ரீகுரு கட்டளைப்படி நாங்கள் சாமந்தி, மாலதி, கல்ஹாரம் ஆகிய பூக்களுடன் வாழை இலைகள் வைத்து ஓர் ஓடத்தை தயார் செய்து நீரின் மேல் வைத்தோம். அப்பொழுது அவர் "நாங்கள் இந்தப் பூ ஓடத்தில் இந்த பாதாள கங்கையை கடந்து மல்லிகார்ஜுனருடன் ஐக்கியமாவோம். நீங்கள் எல்லோரும் கானகாபுரம் சென்றுவிடுங்கள்" என்று கூறினார்.

அவரின் பிரிவைத் தாங்கமுடியாமல் செய்வதறியாமல் நாங்கள் கண்ணீர் பெறுக அங்கேயே நின்றுவிட்டோம். அந்த நிலையில் எங்களைப் பார்த்த ஸ்ரீகுரு எங்களைத் தேற்றி, "பிரியமான சீடர்களே, வேதனைப்படாதீர்கள். நீங்கள் கானகாபுரம் செல்லுங்கள். நீங்கள் நினைத்தபோதெல்லாம் உங்களுக்கு என் தரிசனம் கிடைக்கும். பக்தி இல்லாதவர்களுக்குத் தென்படாமல், பக்தியுடன் பூஜிப்பவர்களுக்குத் தரிசனம் கொடுக்க அங்கே மறைமுகமாக இருப்போம். என்னை நம்பி வேண்டும் பக்தர்களின் இல்லங்களில் நாங்கள் இருந்து அவர்களுக்கு அருள் புரிவோம். இன்று பகுதான்ய வருடம், உத்தராயணம், மாகமாதம், பூச நட்சத்திரம், வெள்ளிக்கிழமை ஆன சுபதினம் ஆனதால் நாங்கள் எங்கள் இருப்பிடத்திற்குச் செல்கிறோம்" என்று கூறி பூ ஓடத்தின் மேல் உட்கார்ந்து புறப்படும் முன் எங்களிடம் கடைசி செய்தியாக இப்படிக் கூறினார்.

**"அப்பன்மார்களே உங்களுக்கு சகல சுபங்கள் ஏற்படும். எங்கள் சரித்திரம் பாராயணம் செய்தவர்கள் அதனுள்ளே இருக்கும் ஸ்தோத்திரங்களைப் படிப்பவர்கள் எங்கள் நாம சங்கீர்த்தனம் செய்பவர்களின் இல்லங்களில் நான்கு விதமான செல்வங்கள், சித்திகள் எப்பொழுதும் குடிகொண்டிருக்கும். வாழ்நாள் முழுவதும் செல்வத்துடன் ஆரோக்கியத்துடன் வாழ்ந்து பிறகு முக்தியடைவார்கள்".**

நாங்கள் ஆனந்த நிலையத்திற்குச் செல்கிறோம். அங்கே சென்றடைந்ததற்கு நினைவாக நான்கு தாமரைப் பூக்கள் நதியில்



வரும். அவற்றை நீங்கள் எடுத்துக் கொண்டு உயிரினும் மேலாக நினைத்துப் பத்திரமாகப் பாதுகாத்துப் பூஜிப்பீர்கள்" என்று கூறி ஓடத்தில் புறப்பட்டுச் சென்று மறைந்தார்.

நாங்கள் குருமூர்த்தியின் பிரிவைத் தாங்காமல் அழுது கொண்டே இருந்தோம். அந்த சமயத்தில் ஒரு படகில் சில மீனவர்கள் வந்து எங்களிடம் அய்யா உங்கள் சுவாமியை நாங்கள் பார்த்தோம். அவர் காஷாய வஸ்திரம், தங்க பாதுகைகளைப் போட்டுக் கொண்டு, கையில் தண்டம் ஏந்தி இருந்தார். அவர் எங்களைப் பார்த்து என் பெயர் நரசிம்ம சரசுவதி, நான் என் சொந்த இடத்திற்குப் போகிறேன், ஆனாலும் மறைமுகமாக கானகாபுரத்தில் எப்பவும் இருப்பேன் என்று உங்களிடம் சொல்லச் சொன்னார். மேலும் நதியில் நான்கு தாமரை பூக்கள் வரும். அவைகளை எடுத்து உங்களிடம் கொடுக்கச் சொன்னார் என்று சொல்லி நதியிலிருந்து வந்து கொண்டிருந்த தாமரைப் பூக்களை எடுத்து வந்து எங்களிடம் கொடுத்தார்கள். அவற்றை நாங்கள் நான்கு பேரும் எடுத்துக் கொண்டு ஸ்ரீகுருவின் லீலைகளையும் மகிமைகளையும் நினைத்துக் கொண்டு கானகாபுரம் வந்தடைந்தோம்.

நாமதாரகா அன்று சுவாமி எனக்குக் கொடுத்த தாமரை பூ இதோ. இதைப் பத்திரமாக வைத்துக்கொண்டு மனதை ஸ்ரீகுருவின் மேல் செலுத்தி அவரை ஆராதனை செய்து கொண்டிருக்கிறேன். குரு சரித்திரம் பக்தர்களுக்கு காமதேனுவாகும். இதைப் படிப்பவர்கள், பாராயணம் செய்பவர்கள் கேட்பவர்கள், துக்கம், வறுமை, நீங்கி எல்லா செல்வங்கள் பெற்று பிள்ளைகள், பேரப் பிள்ளைகளுடன் சுகமாக வாழ்வார்கள் என்று சித்தமுனி கூறினார்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*



## அத்தியாயம் 52

இதுவரையிலும் குரு சரித்திரத்தைக் கேட்ட நாமதாரகன் ஆனந்தவசப்பட்டு உடல் செயலற்று சமாதி நிலையை அடைந்தான். அப்பொழுது சித்தமுனி நாமதாரகனை அந்த சமாதி நிலையிலிருந்து எழுப்பி தன்னுடன் அணைத்துக்கொண்டு "நாமதாரகா நீ பெரும் பாக்கியம் செய்தாய். உன் முன்னோர்கள் ஸ்ரீகுருவிற்குச் செய்த சேவையினால் வந்த புண்ணியத்தினால் இந்த குரு சரித்திரத்தைக் கேட்க முடிந்தது. நீ இனி வாழ்நாள் முழுவதும் ஸ்ரீகுருவின் பாதகமலங்களைப் பூஜித்துக்கொண்டு குருவைத் தியானித்துக்கொண்டு இரு. இதனால் உன் முன்னோர்களும் குருவின் அருளைப் பெற்று நற்கதி அடைவார்கள்" என்றார்.

ஆகையால் பக்தர்களே மனோகரமான இந்த குரு சரித்திரம் எல்லா கோரிக்கைகளை தீர்த்து வைக்கும். இதனைப் படிப்பவர்களின் தன்மையைப் பொறுத்து அவர்களுக்குப் பலன் வரும். ஆகையால் பக்தி சிரத்தையுடன் படித்தால் நீங்கள் வேண்டியது நிறைவேறும். ஸ்ரீகுரு உங்களைக் காப்பாற்றுவார்.

சப்தாக (ஏழு நாட்கள்) பாராயணம் செய்ய நினைத்தவர்கள் நன்னாளில், காலையில் எழுந்து நீராடி பாராயணம் செய்யுமிடத்தை சுத்தம் செய்து தீபத்தை ஏற்றி பூக்களுடன் அலங்கரித்து நூலினை பவித்திரமானதாக நினைத்து தத்த அஷ்டோத்திரத்தை படித்து பாராயணம் ஆரம்பிக்க வேண்டும். அன்றைய பாராயணம் முடிந்தவுடன் ஆரத்தி எடுத்து வணங்க வேண்டும். ஏழு நாட்கள் பாராயணம் முடிந்தவுடன் பிராமணர்களுக்கும் எழைகளுக்கும் அவரவர் சக்திக்கு ஏற்ப தானம் செய்திட வேண்டும். இப்படி சிரத்தையுடன் பாராயணம் செய்தால் தாங்கள் வேண்டியது நிறைவேறும். ஸ்ரீகுருவின் அருளும் ஆசியும் கிடைக்கும்.